**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 311** **நாள்: 19.07.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், எழும்பூர் மகப்பேறு மருத்துவனைக்கு முன்புறம் உள்ள பாந்தியன் சாலையில், நடைபாதை விற்பனை கடைகள் தடைசெய்யப்பட்ட பகுதியில், நடைபாதை போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி மற்றும் காவல் அலுவலர்களுடன் 18.07.2026 அன்று அகற்றப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு-61, எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனை முன்பகுதியில் உள்ள பாந்தியன் சாலையில், நடைபாதை கடைகள் வைக்க அனுமதி மறுக்கப்பட்ட பகுதியில் ( Non Vending Zone) இருந்த ஆக்கிரமிப்பு கடைகள் மாநகராட்சி மற்றும் காவல்துறை அலுவலர்களால் 18.07.2026 அன்று அகற்றப்பட்டது.

இதில், 2 பங்க் கடைகள் (bunk shops), ஒரு கரும்புச் சாறு கடை மற்றும் மூன்று தள்ளுவண்டிகள் அகற்றப்பட்டன.

மேலும், இப்பகுதியில் உள்ள நான்கு கடைகள் தற்போது அறிவிப்பு காலக்கெடுவில் (Notice Period) உள்ளன. அந்தக் கடைகளை ' விற்பனை மண்டலப் பகுதி'யில் (Vending Zone) ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதியில், ஐந்து நாட்களுக்குள் தாங்களாகவே அங்கிருந்து இடமாற்றம் செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஐந்து நாட்களுக்குள் அவை அகற்றப்படாவிட்டால், அந்த நான்கு கடைகளும் அகற்றிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**